பக்கம்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுபர்: 6 திருவள்ளுவர் ஞூ 2022 ஆனி மீ 07 ஃ வெள்ளிக்கிழமை (21 - 6 - 1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 198

# வெலி ஓயாவில் 19படையினர்பலி!

## புலிகளினால் ஆயுதங்களும் மீட்பு

கொழும்பு, ஜூன் 21

**வெலிஓயா (மணல் ஆறு) பகுதியில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் குறைந்தது 19 படையினர் கொல்லப்பட்டனர். இரு சிப்பாய்கள் காயமடைந்தனர். படையினரிடம் இருந்து விடுதலைப் புலிகள் பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றினர். கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.**

கலம்பவெவ என்ற காட்டுப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீதே பாரிய ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் மூலம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் —

உயிரிழந்த இராணுவத்தினரிடம் இருந்து ஆயுதங்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர் என்றும்—

வவுனியாப் பகுதியில் போர் விமானங்கள் மற்றும் ஹெலிக் கொப்டர்களின் உதவியுடன் கடும் தாக்குதலில் இராணுவத்தினர் ஈடுபட்டு வரும் வேளையில் —

விடுதலைப் புலிகள் ஒரே தாக்குதலில் 19 இராணுவத்தினரைக் கொன்றிருப்பது குறிப்பிடத்தக்க அம்சம் என்றும் செய்தி ஏஜென்ஸிகள் கருத்து வெளியிட்டன.

(உ-எ--த)

## முகமாலை பகுதி நோக்கி பீரங்கிக் குண்டுகள்!

தென்மராட்சி, ஜூன் 21

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை நாகர் கோவில் கடற்பகுதியில் நின்ற பீரங்கிப் படகிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் முகமாலையை அண்டிய காட்டுப் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இதனால் அம்பளாவளைப் பகுதி மக்கள் இரவிரவாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

திதேவேளை—

நேற்று முன்தினம் இரவு முழுவதும் ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சி, கட்டுவன்கொட்டி, உமையாள்புரம், கொம்படி வெளிப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ஒ - 117)

## சுருவில் பகுதியில் பதற்றம்; மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஊர்காவற்றுறை, சுருவில் பகுதியிலுள்ள தணுவிலில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை கலிபர் மற்றும் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அக்கு சில பகுதிகளினூடாக வெளியே வந்த படையினர் மிதி வெடிகளில் சிக்கிக் கொண்டனர் என்றும்—

இச்சம்பவத்தை அடுத்தே படையினர் கண்டபடி தாக்குதல்களை நடத்தினர் என்றும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மாநகரசபைக்கு பெரும் நிதி நெருக்கடி

### ஊழியருக்கு சம்பளமும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாண மாநகரசபைக்குப் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஜூன் மாதச் சம்பளத்தைக் கூட வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

மாகாணசபையில் இருந்து வரவேண்டிய நிதி வந்துசேராததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகரசபை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

மாநகரசபை ஊழியர்களுக்குரிய சம்பளம் வழங்க மாதாந்தம் 18 லட்சம் ரூபா தேவைப்படுகிறது. நிதிநெருக்கடி காரணமாக இம் மாதச் சம்பளம் வழங்கப்படவில்லையாயினும் தேவைப்படுவோருக்கு 500 ரூபா முற்பணம் நேற்று வழங்கப்பட்டது.

மாகாணசபையில் இருந்து நிதி வந்து சேர்ந்த பின்னரே ஊழியருக்குரிய இம்மாதச் சம்பளம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-126)

## இராணுவம் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜூன 21

மட்டக்களப்பு மாவட்டம் பாலையடி வெட்டையில் கடந்த 13 ஆம் திகதி வீர சிங்கம் இதயம் (வயது 16) என்ற இளம் பெண்ணை இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே தினத்தில் அப்பகுதியில் தமிழர்களின் மூன்று வீடுகள் படையினரால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

(ஒ - 5)

# ஹெலி பார்வைக்கு!

யாழ்ப்பாணம், ஜூன். 21

வவுனியாவில் விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய ஹெலிக்கொப்டரின் சிதைவுகள் இன்று காலை 10 மணிக்கு மக்கள் பார்வைக்காக சுன்னாகம் மத்திய சந்தைக்கு அருகாமையில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஞாயிறன்று வவுனியா—மன்னார் காடுகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்டிருந்த சமயம் இந்த ஹெலிக் கொப்டரை புலிகள் சுட்டு வீழ்த்தியிருந்தனர் என்பது தெரிந்ததே. (உ)

# நரசிம்மராவ் புதிய பிரதமர்

புதுடில்லி, ஜூன் 21

இந்தியாவின் புதிய பிரதம மந்திரியாக திரு. பி. வி. நரசிம்மராவ் இன்று பதவி ஏற்கிறார். ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன் அவருக்கு இன்று காலை பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

காங்கிரஸ் அரசுக்கிருக்கும் பெரும்பான்மையை நாங்கு வாரங்களுக்குள் நிரூபிக்கும் படி நரசிம்மராவை ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

சனநாயக இந்தியாவின் 44 வருட வரலாற்றில், அதன் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்கும் முதலாவது தென்னிந்தியர் என்ற பெருமையை 70 வயதினரான திரு. நரசிம்மராவ் பெறுகிறார்.

இரண்டு தடவைகள் வெளியுறவு அமைச்சராகப் பணிபுரிந்த அவர் காங்கிரஸ் கட்சியின் மிக மூத்த தலைவர்களில் ஒருவர்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் புதிய தலைவராக திரு. பி. வி. நரசிம்மராவ் நேற்று மாலை தெரிவு செய்யப்பட்டார். கட்சிப் பெருளாளர் கீதா ரகமகேசரி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. நரசிம்மராவின் பெயரை மத்தியப் பிரதேச முன்னாள் முதலமைச்சர் அர்ஜூன்சிங் முன்மொழிந்தார்.

முன்னாள் மத்திய அமைச்சர்களான சிவசங்கர், சால்வே, திருமதி ஷீலா தீக்ஷித், மகாராஷ்டிர முன்னாள் முதலமைச்சர் அந்துலே ஆகியோர் வழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சி அமைப்பதில் சிக்கல்!

புதுடில்லி, ஜூன் 21

இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதற்கு தேசிய முன்னணியோ அல்லது அதனுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் இடதுசாரிக் கட்சிகளோ ஆதரவளிக்க மாட்டா.

—தேசிய முன்னணியின் தலைவர் என். ரி. ராமராவ் நேற்று மாலை தூரதர்ஷனுக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றில் இப்படி கூறியிருக்கிறார்.

''இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிப்பது என்பது சாத்தியப்படாத விடயம். தேசிய முன்னணி ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகவே செயற்படும்''— என்றும் அவர் சொன்னார்.

தற்சமயம் தேர்தல் நடந்த 511 தொகுதிகளில் குறைந்தது 256 தொகுதிகளில் வெற்றிபெற்ற எம்.பிக்களின் ஆதரவு இருந்தாலேயே காங்கிரஸ் கட்சியினால் நிலையான அரசு அமைக்க முடியும்.

ஆனால் காங்கிரஸ் கட்சிக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் தற்சமயம் 240 ஆசனங்கள் வரையே கிடைத்திருக்கின்றன.

இந்நிலையில் பாரதீய ஜனதாக் கட்சியும், தேசிய முன்னணியும், காங்கிரஸ் கட்சியின் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என அறிவித்திருக்கின்றன. இது அமைவிருக்கும் காங்கிரஸ் அரசுக்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால்—

பாரதிய ஜனதா மற்றும் தேசிய முன்னணி, அகாலிதள் கூட்டுச் சேர்ந்த இடதுசாரிக்

(4ஆம் பக்கம் பாக்க)

## ஞ்சாப்பில் தேர்தல்

சண்டிகார், ஜூன் 21

பஞ்சாப் மாநிலத்தில் சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நாளை சனிக் கிழமை நடைபெறும்.

105 சட்டசபைத் தொகுதிகளிலும் 11 லோக்சபைத் தொகுதிகளிலும் நடைபெறவுள்ள இத்தேர்தலில் சுமார் ஒருகோடி பேர் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர்.

வேட்பாளர்கள் சிலர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, 3 லோக்சபைத் தொகுதிகளிலும் 21 சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

(ஒ-எ)

## வவுனியாப் பகுதியில் சண்டை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 21

வவுனியா — மன்னார் காட்டுப்பகுதிகளில் நேற்றும் மோதல்கள் இடம் பெற்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே தொடர்ந்து உக்கிரச்சண்டை நடைபெற்று வருவதாக பி. பி. ஸி.யும் அறிவித்தது.

ஸ்ரீலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நேற்றும் தாக்குதல்களை நடத்தியதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

வவுனியாப் பகுதியில் கூடந்த புதன்கிழமை தொடந்த சண்டையில் மேலும் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்

[4ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி

கையேந்திறதுக்காக அடுத்த நாட்டுக்கு ஓடுறதும் ஒரு பிழைப்பே.....!

# ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரி 2 லட்சம் ஈழத் தமிழர் விண்ணப்பம்

லண்டன், ஜூன் 21

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரிவரும் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

1990 ஆம் ஆண்டில் மட்டும் ஐரோப்பிய நாடுகளில் இரு பதினாயிரம் ஈழத் தமிழர்கள் தஞ்சம் கோரினார்கள். அண்மையில் நடைபெற்ற ''அகதிகள் மற்றும் நாடு கடத்தப்பட்டவர்களுக்கான ஐரோப்பிய ஆலோசனைச் சங்க''த்தின் கூட்டத்தில் இந்தப் புள்ளிவிவரம் வெளியிடப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளில் மொத்தம் இரண்டு லட்சம் ஈழத் தமிழர்கள் இதுவரை தஞ்சம் கோரி உள்ளனர் என்றும்—

இவர்களில் 75 சதவீதத்தினர் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர் என்றும்— மேலும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனில் மட்டும் 30 ஆயிரம் ஈழத்தமிழர்களில் 60 சதவீதத்தினருக்கு அல்லது 1990 ஆண்டில் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களைக் கருத்தில் எடுத்துக் கொண்டு பிரெஞ்சு அரசாங்கம் தாராளமாக நடந்து கொண்டது. கடந்த இரண்டு வருடங்களில் தஞ்சம் கோரி விண்ணப்பித்த 6 ஆயிரம் ஈழத்தமிழர்களில் 60 சதவீதத்தினருக்கு அல்லது மி வழங்கியது.

ஆனால் இவ்வருடம் ஜனவரியில் வியன்னாவில் நடந்த மாநாடு ஒன்றின் பின்னர், தனது நிலைப்பாட்டை அது மாற்றிக் கொண்டது. புதிதாக பிரான்ஸுக்கு வருவோரை நாடு கடத்தும் நிலைப்பாட்டை இப்போது கடைப்பிடிக்கிறது.

[4ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 10 ஸ்ரீ தொடர்பிலக பஜ ஜ் ஸ்கூட்டர் உடன் மாற்றுப் பனை குண்டு. தொடர்பு: மின்சார சபை காரியாலயம். (மனோகரா சந்திக்கு அருகாமையில்) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (17239)

### தேவை

தள்ளுகதிரை (Wheel Chair) உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும்: சர்வ பந்தன் டிஸ்பென்சரி, 574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (17229)

திருகுமூடி (Screw Lids) போடக் கூடிய ஜாம் (Jam) போத்தல்கள் தேவை. நியாயமான விலையில் காலை 9-00 மணிமுதல் பி.ப. 4-30 மணி வரை இடைநேரங்களில் பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும். Tasteline Industries Pvt. Ltd., 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (17226)

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17238)

### தவறிவிட்டது

சிவலு சிவிபால யோகி ஆகிய எனது அடையாள அட்டை [இல: 7114636X2] பேர்கூடன் 18-6-1991 இல் யாழ். பிரதான வீதிக்கும், கே. கே. எஸ். வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (17240)

### மணப்பெண்கள் தேவையா?

U. K. ஆஸ்திரேலியா, கனடாவில் வேலை செய்யும் ஆண்களுக்கு, அங்கு தொழில் செய்யும் அழகியபண்புப்பெண்கள் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம். மங்களா ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17223)

### வகுப்புகள்

உதவி ஆங்கில ஆசிரியருக்கான இலக்கண வகுப்புகள் 19 - 6 - 1991 இல் நடைபெற உள்ளன. By B. Manjula 21/2, அம்மன் வீதி, சந்தர்மடம், யாழ்ப்பாணம். (17101)

### மூங்கில் தடிகள் தேவை

மூங்கில் தடிகள் தொகையாகத் தேவைப்படுகிறது. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில் தெற்கு, இணுவில். (சி/0126)

B Sc பொறியியலாளர் 35வயது B.Sc. பெண்தேவை. 40 வயது B. Sc பொறியியலாளருக்கு பெண் சீதனத்துடன் தேவை. 49 வயது J T O. பொறியியலாளருக்கு ஆசிரியை பெண் தேவை. கிறிஸ்தவம் கூடியவர்கள் தொடர்பு: ABCDE., விவாகப் பொருத்துனர் 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (17232)

### ரைப்பிங் சேவை

தமிழ் [புதிய விசைப்பலகை] ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் தமிழ், ஆங்கிலம். [ஸ்ரென்சில்] ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். FUDO, 39/17, மிஷனரி நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இலை: பிரதான வீதி, மணிப்பாய் (நகரண்மை முன்பாக)] (சி/0165)

### மணமகள் தேவை

யாழ் இணுவையைச் சேர்ந்த 32 வயது, கப்பலில் தொழில் புரிந்து, விரைவில் வதிவிடத்திற்கும் மணமகனுக்குப் பெண் தேவை. நட்சத்திரம் உத்தரட்டாதி, 4இல் செவ்வாய் தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி (17231)

### மோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பிரம்மரை சோதிட மாந்திரீக நிபுணரை கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 219, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [பழைய பாணம் நகுலேஸ்வரி மகன் பாக] இனகரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (4163)

## நயினை பக்தர்கள் சிரமம்

நெடுந்தீவு, ஜூன் 21

பிரயாணிகள் வசதியாகச் செல்லக்கூடிய அளவரசி போன்ற படகுகள் சேவையில் இல்லாததால் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்குச் செல்லும் எழுவைதீவு, அனலைதீவுப் பயணிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

நாற்பது, ஐம்பது பயணிகள் செல்லக்கூடிய படகுகளில் நூற்றிஐம்பதுக்கு மேற்பட்ட பயணிகள் ஏறுவதால் படகுகளைத் துறைமுகப் பக்கத்தில் நிறுத்துவதில் சிரமமேற்படுவதாகப் படகுச்சொந்தக் காரர்கள் தெரிவிக்கின்றனர். (இ111)

## இணுவில் சந்தி கடைகளில் திருட்டு

இணுவில் சந்தியிலுள்ள இரண்டு கடைகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடைகளின் முன் கதவுகள் உடைக்கப்பட்டே திருடப்பட்டுள்ளன.

## பரிசளிப்பும் நிறுவுநர் நினைவு தினமும்

யாழ். கல்முதினம் பக்கிய மகாவித்தியாலயத்தில் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் நினைவு தினமும் நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும். (இ)

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் திவச வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:
02 — 04 — 1919

மலர்வு:
02 — 06 — 1990

நிதி:
21-06-1991

### அமரர் மார்க்கண்டு நடராசா

(இலைப்பாறிய புடையிரத பிரதான பாதுகாவலர்)

அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் நினைவுள் எம்மனதை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைனைப் பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர், பேரப்பிள்ளைகள்.

குறிப்பு: இன்று 21 - 06 - 1991 வெள்ளிக்கிழமை நடக்கும் திவச வீட்டுப் பூசையில் கலந்து கொள்ளமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அவரது பாரியாரும், பிள்ளைகளும்.

சுழிபுரம் கேற்த
பிரதான வீதி, சுழிபுரம். [17242]

---

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்
## பொதுக் கூட்டம்

இடம்: கல்லூரி மண்டபம்

காலம்: 23 - 06 - 1991 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3-30 மணி

பழைய மாணவர் அனைவரையும் கலந்து கொண்டு பாடசாலை வளர்ச்சியில் பங்கு கொள்ள அழைக்கிறோம்.

ப. பரமேஸ்வரன்.
அதிபர்

[சி-0132]

---

## திருமண அழைப்பு

நிகழ்வு மிதசோற்பத்தி வருடம் ஆனித்திங்கள் 17 ஆம் நாள் [01 - 07 - 91] திங்கட்கிழமை பகல் 11 - 56 — 1 - 26 வரையுள்ள சுப முகூர்த்தத்தில்,

எமது

சிரேஷ்டபுத்திரன் திருநிறை செல்வன்
**கைலாசநாதன்**
[பேர்கன் பல்கலைக்கழகம், நோர்வே]
அவர்களுக்கும்

ஏக புத்திரி திருநிறை செல்வி
**யசோதினி**
[ஓஸ்லோ பல்கலைக்கழகம், நோர்வே]
அவர்களுக்கும்

எம்பெருமான் திருவருளால் சரஸ்வதி மண்டபத்தில் நிகழும் திருமணத்தின் போது உற்றார், உறவினர், நண்பர்கள் சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. சந்திரபால்
(பட்டதாரி ஆசிரியர்)
பாரியாரும்

கா. மாணிக்கவாசகர்
(நூலகர், யாழ். மத்திய கல்லூரி)
பாரியாரும்

1, ஜோசப் லேன், கொழும்பு - 4.

154, புதுச் செட்டித்தெரு, கொழும்பு - 13.

[17235]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 10 — 8 — 1925

உதிர்வு: 22 — 5 — 1991

### அமரர் தம்பிப்பிள்ளை வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற கணிஅபிவிருத்தி உத்தியோகத்தர்)

அன்பின் ஒளிவிளக்கே! எம்மை வாழவைத்த தெய்வமே! பண்புடனே எம்மை வளர்த்த பாசமிகு பாரே! ஓரு நிமிடம் நீ எம்மைவிட்டு அகன்றாலும் உன்னுயிரை வேர்த்தானே! செய்வது அறியாது ஏங்கித் தவிக்கின்றோம், எம் உயிர் உள்ளவரை எம்மனத்தே நின்றிடுவீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"மணிவல்லபம்" மனைவி, பிள்ளைகள்.
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (4157)

---

## நெஞ்சங்களின் நினைவுகளில் 2 ஆம் ஆண்டு



### அமரர் இராமலிங்கம் கந்தையா

[இளைப்பாறிய வ. மி. போ. ச. சாரதி பரிசோதகர் கோண்டாவில்]

மண்ணில்: 30-11-1927
விண்ணில்: 13-07-1989

நிதி: 21-06-1991

தந்தை மகற்காற்றும் உதவிகள் தான் அத்தனையும்
தந்து எமை மன் அலையத்தில் வைத்த தெய்வம்!
சிந்தையிலே நல்லெண்ணம் சீர்பெறு நல் இல்வாழ்வில்
சிறப்பான மந்திரதேன் நிகர் சொல்லாம்
எந்தையே எமக்கெது குறையுமில்லை எஞ்ஞான்றும்
எம்முள்ளம் வீற்றிருக்கும் நிழலுருவே ஐயாவை
வந்தனையே செய்கின்றோம் வாலுயர நீர் ஆத்மா
வாலறிவன் அங்கிருந்து சாந்தி விழ வழமாக!

திருமதி க. திருஞானசக்தி
[அன்புமனைவி]
க. மோகனதாஸ் [அருமைமகன்]
க. மோகனரஞ்சினி [அருமை மகள்]

"மோகன பவனம்"
பன்னாலை,
தெல்லிப்பழை. [17230]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குற்றம் பெருக்கும் விசாரணை குழுக்கள்!

வடக்கு - கிழக்கில் பணி புரிந்த பிரெஞ்சு வைத்தியக் குழுவைச் சேர்ந்த டாக்டர்கள் படிப்படியாக வெளியேற உள்ளனர். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீதும் அதன் உயிரான இராணுவத்தின் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டதால் பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

குறிப்பாக வவுனியா தாண்டிக்குளத்தில் பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் [எம் எஸ். எவ்.] மீது ஹெலிக்கொப்டர் மேற்கொண்ட தாக்குதல் பற்றி அரசு நடத்திய விசாரணை சம்பந்தமான அறிக்கை அவர்களை இந்த முடிவுக்குத் தூண்டியுள்ளது.

விசாரணைக் குழுவின் தீர்ப்பு அநீதியானது. விசாரணை ஒரு கண்துடைப்பு. அது ஏற்க முடியாதது. நீதிபதி ஒருவர் அரசின் கண்துடைப்பு வேலைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார். போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் பறந்து வரும்போது என்ன செய்ய வேண்டும் என்று அரசு கூறிய விதிமுறைகளைக் கடைப்பிடித்த பின்பும், நம்மீது விமானப் படை தாக்குதல் நடத்தியிருக்கிறது—

அதனை நல்ல எண்ணத்துடன் செய்த தவறு என்று விசாரணைக் குழு தெரிவித்திருப்பது அபத்தம். இனியும் ஸ்ரீலங்கா இராணுவத்தை, படைகளை நாம் நம்பத் தயாரில்லை — என்று எம். எஸ். எவ். குழுவின் தலைவர் அரசாங்கத்தைச் சாடியிருக்கிறார்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இலங்கை அரசின் சார்பில் நடத்தப்படும் விசாரணைகள் எல்லாம் இந்தக் கண்துடைப்பு இலட்சணத்தினவையே.

இந்த இலட்சணத்தில் கொக்கட்டிச்சோலைப் பச்சைப் படுகொலைகளை விசாரிக்கவும் ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது! அப்பாவித் தமிழர்கள் அக்கிரமமாகக் கொலை செய்யப்பட்டது குறித்து இதற்கு முன்னரும் பல விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டது உண்டு.

எத்தனை விசாரணைக் குழுக்கள், ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் தமிழர்கள் இன்னமும் தொடர்ந்து பச்சைப்படுகொலை செய்யப்படுகிறார்கள். அவர்களின் மனித உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் அடிமைகளாக நசுக்கப்படுகிறார்கள். ஆகையால் விசாரணைக் குழுக்கள் உலகத்தை ஏமாற்றுவதற்கான நடவடிக்கையே என்பது தமிழர்களுக்கு எப்போதே தெரிந்த விவகாரம்.

வெளிநாட்டு நிறுவனமான எம். எஸ். எவ்வும் தனது சொந்த அனுபவத்தில் ஸ்ரீலங்கா - அரசின் கண்துடைப்பை இப்போது கண்டு பிடித்திருக்கிறது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கே கண்துடைப்புச் செய்யும் துணிவு அரசுக்கு உண்டெனில், தமிழர்களை அது விட்டு வைக்குமா?

ஸ்ரீலங்கா அரசாங்கம், தான் அல்லது தனது அதிகாரிகள் செய்யும் தவறுகளை மூடி மறைக்கவும், வெளியில் நல்ல பிள்ளையாக நடித்துக்கொள்ளவும் மட்டும் விசாரணைக் குழுக்களை நியமிப்பதில்லை. தவறுகளை மேன்மேலும் தூண்டுவதற்கும் பெருக்குவதற்குமே அரசு விசாரணைக் குழுக்களை நியமிக்கிறது! தவறுகள் சரியானவை என்று தீர்ப்புக்கூறப்பட்டால் ஒருவன் செய்த தவறை மேலும் ஒன்பது பேர் செய்யத் துணியமாட்டார்களா? குற்றம் செய்தவனை தண்டிக்காத போது அதனைச் சாதகமாக்கிக் கொண்டு மேலும் பலர் அதே குற்றத்தைச் செய்ய முனைய மாட்டார்களா?

# உணவுப் பொருள் தடையால் மக்கள் பட்டினி நிலையில்

## ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் ஜூன் 21

கப்பல் மூலம் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகின்ற போதிலும், அது மக்களின் தேவையில் நான்கில் ஒரு பங்கையாவது பூர்த்தி செய்வதாக இல்லை. உணவுப் பொருள்கள் தரை வழியாக தாராளமாக கொண்டு வரப்படுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் பட்டினிச்சாவை எதிர்நோக்கி எமது மக்கள் கலங்கிக் கொண்டிருக்கின்றனர்.

வலி- வடக்கு புனர்வாழ்வுக்கழகம், ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த ஆர்ப்பாட்ட பேரணியின் போது யாழ். அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பப்படுவதற்காக இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரில் உள்ள மற்றும் முக்கிய அம்சங்கள் வருமாறு.

★ சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளன. தமது உடைமைகள் அனைத்தையும் விட்டு உயிரைக் காத்துக் கொள்ளும் நோக்கோடு ஓடிய மக்கள், அகதிகளாக கோவில் மண்டபங்களிலும், மர நிழல்களிலும் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியோடு வாழ்ந்து வருகின்றனர்.

★ காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, மத்திய மகா வித்தியாலயம், மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம், கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம், வீமன்காமம் மகா வித்தியாலயம், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, கட்டுவன்புலம் மகா வித்தியாலயம், குரும்பசிட்டி பொன் பரமானந்தா மகா வித்தியாலயம் உட்பட சுமார் 40 பாடசாலைகள் வரை அதே இடத்தில் இயங்க முடியாத நிலையிலுள்ளன. 10 ஆயிரம் தமிழ் மாணவர்களின் கல்வி உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

★ சுமார் 10 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் தமது விளை நிலங்களில் பயிர் செய்ய முடியாது விரட்டப்பட்டுள்ளன.

★ மயிலிட்டி, பலாலி, ஊறணி, காங்கேசன்துறை, வலித்தூண்டல் பகுதி மீனவர்கள் வள்ளங்கள், வலைகள், மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் முற்றாக இழந்துவிட்டு நிர்க்கதியான நிலையில் வீதியோரங்களில் குடும்பங்களோடு நிற்கின்றனர்.

★ காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, லங்கா சீமெந்து லிமிட்டெட், அலுமினியத் தொழிற்சாலை, வாளித் தொழிற்சாலை, துறைமுகம் போன்றவை முற்றாகவே மூடப்பட்டுள்ளதால் அங்கு தொழில் புரிந்து தமது சீவனத்தை நடத்தி வந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ சீவல் தொழிலாளர், கூலித் தொழிலாளர், நாளாந்த வருமானத்தை நம்பி வாழுவோர் முதலான அயிரக்கணக்கானோர் இன்று நடுத்தெருவிலே நாதியற்று நிற்கின்றனர்.

★ தமிழ் மக்களின் புண்ணிய வணக்கத் தலங்களான வரலாற்றுப் பெருமை மிக்க கீரிமலை சிவாலயம், மாவை கந்தசாமிகோவில், போயிட்டி கிருஸ்ணர் கோவில், ஊறணி அந்தோனியார் ஆலயம், வலித்தூண்டல், மயிலிட்டி, தெல்லிப்பளை, பலாலி பகுதியிலுள்ள தேவாலயங்கள், இந்து ஆலயங்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்களில் மக்கள் வழிபாடு செய்யும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அக் கோயில்களில் நித்திய பூஜைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தமிழ் மக்களின் மத உணர்வுகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.

★ பாதுகாப்புப் படையினரின் வசத்திலுள்ள அனைத்துச் சுகாதார வைத்திய நிலையங்களும் செயலற்றுப்போயுள்ளன. குறிப்பாக மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை நிலையம், தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனை இரண்டும் மூடப்பட்டுள்ளதால் நோயாளர்கள்படுகின்ற இன்னல்கள் கொஞ்சமன்று.

★ இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதியிலுள்ள பொதுமக்களின் வீடுகள் உடைத்து நொருக்கப்படுகின்றன. மற்றப் பகுதிகளில் கண்மூடித்தனமான ஷெல்லடி, விமானக் குண்டு வீச்சுக்கள் இடம் பெறுவதால் தனியார் வீடுகள்- பாடசாலைகள்- தபால் நிலையம், மருத்துவ மனைகள், தேவாலயங்கள் எல்லாமே தகர்த்தெறியப்படுகின்றன.

★ வலிகாமப் பிரதேசத்தில், பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டுள்ள இடங்களில் பொது மக்கள் பலர் சிக்குண்டுள்ளனர். இவர்களை எமது மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்துக்குக் கொண்டு வர செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக எடுத்த முயற்சிகள் எதுவுமே பயனளிக்கவில்லை.

★ ஓய்வூதியம், அரச ஊழியர் சம்பளம், தர்மப்பணம் போன்ற கொடுப்பனவுகள் கூட ஒழுங்காக கொடுபடுவதில்லை. சில அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளம் முற்றாகவே நிறுத்தப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளை - சாவகச்சேரி:

# மீட்பு நிதி பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன், 21

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் சாவகச்சேரி வட்டவைப் பிரிவிலும் மீட்பு நிதி பெறப்படவுள்ளது என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவு

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கும், நண்பகல் 12-00 மணிக்கும் இடையில் மீட்பு நிதி பெறப்படவுள்ளது.

மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின், தெல்லிப்பளை வட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, வறுத்தலைவிளான், மாவிட்டபுரம், தெல்லிப்பளை, கீரிமலை ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சென்று வேறு இடங்களில் வாழ்வோர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

### சாவகச்சேரி வட்டவை பிரிவு

சாவகச்சேரி வட்டவையுள் அடங்கும் மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில், சரசாலை, கைதடி, நாவற்குளி பகுதிகளில் உள்ள சகல சிற்றூரவைகளையும் சேர்ந்தவர்களிடமிருந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும், 11-00 மணிக்குமிடையில் மீட்புநிதி பெறப்படவுள்ளது.

மீட்பு நிதி செலுத்த உள்ளோர் சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (இ)

## தையல் பயிற்சி நிலையம்

சாவகச்சேரி, ஜூன் 21

தேசிய இளைஞர் சேவை மன்றம் எதிர்வரும் 28 ஆம் திகதி தையல் பயிற்சி நிலையம் ஒன்றைக் கைதடியில் திறந்து வைக்க இருக்கிறது. [இ-31]

# யாழ். விஞ்ஞானக் கழகம் உருவானதன் நோக்கங்கள்

யாழ்ப்பாணம் விஞ்ஞானக் கழகத்தின் ஆரம்ப நிகழ்வைக் குறிக்கும் விதத்தில் அதன் தலைவர் உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ''அபிவிருத்தியில மூன்றாம் நிலைக்கல்வி'' என்னும் விடயம் தொடர்பாக இன்று அங்குரார்ப்பண உரை நிகழ்த்துகிறார். அதனையொட்டி இக்குறிப்பு வெளியாகிறது.

யாழ்ப்பாண விஞ்ஞானக் கழகம் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பலராலும் பலகாலமாக இத்தகைய கழகம் ஒன்றின் அவசியம் உணரப்பட்டிருந்தபோதும் அது இப்போது தான் நிறைவெய்தலாயிற்று.

யாழ்ப்பாண விஞ்ஞானக் கழகத்தின் பிரதான நோக்கங்களாகப் பின்வருவன அமைந்துள்ளன:- யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் விஞ்ஞானத்தையும், விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியையும் மேம்படுத்தல், பிராந்தியத்திற்குப் பொருத்தமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை உபயோகித்தலும், பரப்புதலும், விஞ்ஞானக்கல்வியையும், தொழில்நுட்ப அறிவையும் உயர்வடையச் செய்தல்.

இக்கழகம் நான்கு பிரதான பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தூயவிஞ்ஞானத்திற்கென தனிப் பிரிவும், பிரயோக விஞ்ஞானத்திற்கும், தொழில்நுட்பத்திற்குமென இன்னோர் பிரிவும், மருத்துவ விஞ்ஞானத்திற்கென வேறோர் பிரிவும், சமூக விஞ்ஞானத்திற்கென மற்றோர் பிரிவுமாக இயங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விஞ்ஞானக் கழகத்தின் மேற்படி பிரிவுகள் தனியான முறையில் கருத்தரங்குகளையும், பயிற்சிக் கூடங்களையும், தனித்தும், இணைந்தும் நடத்தும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கழகம் பிராந்தியப் பாடசாலைகளில் பாடசாலைச் செயற்திட்டங்களை மேம்படுத்தும் வகையிலும், விஞ்ஞானக் கல்வி, தொழில்நுட்ப நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் வகையிலும் முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. அத்துடன் ஆராய்ச்சி, அபிவிருத்தி தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் [illegible] நிறுவனங்களுக்கும் இடையில் பரஸ்பரம் ஒத்துழைத்து நன்மை பெறும் நோக்கையும் கொண்டுள்ளது.

### அங்கத்துவம்

யாழ்ப்பாண விஞ்ஞானக் கழகத்தின் அங்கத்துவம் விஞ்ஞானம் அல்லது அத்துடன் தொடர்புடைய கற்கைநெறியில் பட்டதாரி தகுதியை உடையவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அதனை விட விஞ்ஞானத் துறைக்கு ஒருவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை கொண்டு நிர்வாகக்குழுவின் அமைதியுடன் அவர்களுக்கும் அங்கத்துவம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண விஞ்ஞானக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அது பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். தீபகற்பத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்காக விரிவுரைகளையும், கருத்தரங்குத் தொடர்களையும் நடத்த திட்டமிட்டுச் சிலவற்றை நிறைவேற்றியும் உள்ளது.

அத்துடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் உயர்வகுப்பு மாணவரிடையே ஆராய்ச்சித் திட்டங்களை ஊக்குவிக்கும் வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. பேராசிரியர் கே. தெய்வேந்திரராஜா அவர்களினாலும், கலாநிதி பி. சிவகடாட்சம் அவர்களினாலும், யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் கே. எஸ். குகதாசன் அவர்களினாலும் சமாந்தரமாக மூன்று விரிவுரைகள் வேறுபட்ட தலைப்புக்களில் நடத்தப்பட்டுள்ளன. இவை தூய விஞ்ஞானப் பிரிவின் நடவடிக்கைகளாகும்.

### பொருட்காட்சிகள்

பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பப் பிரிவு இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் பனம்பொருள் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்குத் தொடர் ஒன்றினையும் அதனுடன் பொருட்காட்சி ஒன்றினையும் யாழ். பல்கலைக்கழகத்தில் பனை அபிவிருத்தி சபையின் உதவியுடன் நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மருத்துவப் பிரிவு சுகாதாரம் பற்றிய பொருட்காட்சி ஒன்றினை நடத்தி அதன் மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

சமூக விஞ்ஞானப் பிரிவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து வரலாற்றுப் பாடநூல்களில் தமிழ் மக்களின் வரலாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ள விதம் குறித்து ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றினை வரலாற்றுத்துறைப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் தலைமையிலே நடத்தியது. தற்போது இனையும், அரசியல் அதிகாரப் பரவலாக்கலும் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை ஜூலை மாத இறுதியளவில் நடத்த திட்டமிட்டுள்ளது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உத்தரப் பிரதேச ஆட்சி பாரதிய ஜனதாவிடம்!

லக்னோ, ஜூன் 21

உத்தரப்பிரதேச மாநில சட்டசபைக்கான தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி அறுதிப் பெரும்பான்மையை பெற்றுள்ளது.

எதிர்வரும் திங்கள் பாரதிய ஜனதா அரசு பதவி ஏற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலும் திரு. கல்யாண்சிங்கை முதலமைச்சராக பாரதிய ஜனதாக் கட்சியின் சட்டசபைக் குழு தெரிவு செய்யும் என்று கூறப்படுகிறது.

தேர்தல் நடந்த 405 தொகுதிகளில் பாரதிய ஜனதா 209 இல் வெற்றி பீட்டியது. (ஒ-எ)

# லோகசபை முடிவுகள்

புதுடில்லி, ஜூன் 21

இன்று அதிகாலை வரை அறிவிக்கப்பட்ட இந்திய லோகசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

| | |
|---|---|
| மொத்தத் தொகுதிகள் | — 543 |
| தேர்தல் நடந்தவை | — 511 |
| முடிவுகள் வெளியானவை | — 504 |
| ★ இந்திரா காங்கிரஸ் | — 224 |
| ★ பாரதிய ஜனதாக் கட்சி | — 119 |
| ★ ஜனதா தள் | — 53 |
| ★ மார்க்சிய கம்யூனிஸ்ட் | — 35 |
| ★ இந்திய கம்யூனிஸ்ட் | — 13 |
| ★ அ. இ. அ. தி. மு. க. | — 11 |
| ★ தெலுங்கு தேசம் | — 13 |
| ★ இன்மோர்ச்சா | — 06 |
| ★ சிவசேனா | — 04 |
| ★ சமாஜவாதி ஜனதாக் கட்சி | — 05 |
| ★ இந்தியன் முஸ்லிம் லீக் | — 02 |
| ★ ஏனையவை | — 19 |

# புதிய பிரதமராகும் ராவிற்கு இன்று 70வது பிறந்த நாள்

புதிய பிரதமராகப் பதவி ஏற்கவிருக்கும் திரு. பி. வி. நரசிம்மராவ் 1921 இல் ஆந்திர மாநிலத்தில் கரீம் நகரில் பிறந்தார். அவரது 70 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

சட்டம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற திரு. நரசிம்மராவ் ஒரு கல்விமான்; பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். இந்தி, மராத்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் அவர் நூல்கள் எழுதியுள்ளார்.

வழக்கறிஞரான அவர் பத்திரிகையாளராகவும் இருந்திருக்கிறார்.

ஆந்திர மாநில முதலமைச்சராக 1971 முதல் 1973 வரை திரு. ராவ் பணிபுரிந்திருக்கிறார்.

இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி அமைச்சரவைகளில் திரு. ராவ் வெளியுறவு, பாதுகாப்பு மற்றும் மனித மேம் பாட்டு வளத் துறை அமைச்சர் பதவிகளை வகித்தார். (உ-ஏ)

## வவுனியா...

டனர் என்றும் நான்கு படையினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டதாக அதில் இந்திய வானொலி நேற்று அறிவித்தது. (ஒ-எ-த-5)

## யனவின் இன்னிசை நிகழ்ச்சி

சாவகச்சேரி, ஜூன் 21

சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நாளை மனிக்மெலை இசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. சாந்தன் இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சியும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும் "களத்தில் கானம்" நிகழ்ச்சியும் இதில் இடம் பெறும்.

இடம் பெயர்ந்தோருக்கு வீடுகள் அமைப்பதற்காக சாவகச்சேரி லயன்ஸ் கழகம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. (இ-31)

## ஆட்சி..

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

கட்சிகள்ஆகியவை தவிர்ந்த உதிரிக்கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்க காங்கிரஸ் முயற்சிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில்—

பஞ்சாப்பில் 11 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு நாளை தேர்தல் நடைபெறவிருக்கிறது.

பஞ்சாப்பில் காங்கிரஸ் கட்சிக்கு ஆசனங்கள் கிடைப்பதற்கு வாய்ப்புக் குறைவு எனறும்—

பஞ்சாப் தேர்தல் நடந்து முடிந்து முடிவுகள் வெளியாகும் போது, ஆட்சி அமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கான ஆசனங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும்—

இது ஆட்சி அமைப்பதற்கு தாங்கிரஸுக்கு மேலும் நெருக்குடியை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஐரோப்பிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால்—

ஐக்கிய நாடுகள் அகதிகள் தாராளயத்தைக் கலந்தாலோசியாமல் ஈழத்தமிழர் எவரையும் நாடு கடத்துவதில்லை என்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது. (அ-3)

## நரசிம்மராவ்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொழிந்தனர்.

திரு. நரசிம்மராவ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது அறிவிக்கப்பட்டதும் புதிய எம். பிக்கள் கைதட்டி ஆரவாரஞ் செய்து வரவேற்றனர்.

நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கூடுவதற்கு ஒரு மணித்தியாலம் முன்பதாக தாம் போட்டியில் இருந்து விலகும் முடிவை மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. சரத்பவார் அறிவித்திருந்தார்.

நாடாளுமன்றக் குழுத் தலைவராக திரு. பி. வி. நரசிம்மராவை ஏகமனதாகத் தெரிவு செய்யுமாறு அவர் காங்கிரஸ் எம். பிக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் கேட்டுக்கொண்டார். (அ-எ)

## சுருவில் பகுதி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

நேற்று முன்தினம் இரவும் கடற்பகுதியில் இருந்து சுருவிை அண்டிய பகுதிகளை நோக்கி கடும் கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் அப்பகுதிகள் எங்கும் அதிர்ந்தன.

அதைத் தொடர்ந்து வேலணை, மண்கும்பான், அல்லைப் பிட்டிப் பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் மூடைமுடிச்சுகளுடன் இடம்பெயர்ந்தனர்.

இது இவ் வாரிருக்க, சுருவில், தணுவில் பகுதியில் பதுங்குகுழி அமைத்து வந்த இராணுவத்தினர் அவற்றை பாதியில் விட்டுவிட்டு ஓடிவிட்டனர். (ஒ-125-51)

# புகழுடல்கள் அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 21

கடந்த புதனன்று வவுனியாவில் புலிலங்கா படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நால்வரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக இன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சுன்னாகம் சந்தை மைதானத்தில் வைக்கப்படும். அதைத் தொடர்ந்து அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

பின்னர் புகழுடல்கள் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தீயுடன் சங்கமமாகும்.

போராளிகளான சுதா (வைத்திலிங்கம் பரமலிங்கம் — அராலி), கன்னையா (வேலாயுதம் சிவகுமார் — நீர்வேலி), ஆனந்தகுமார் (சங்கர் சுப்பிரமணியம் — மாலிப் பாய்), குமார் (பரமநாதன் — கடற்கரைச்சேணை, திருமலை) ஆகியோரின் புகழுடல்களே இன்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவிருக்கின்றன. (உ)

## அஸாமில் மீண்டும் காங்கிரஸ்

புதுடில்லி, ஜூன் 21

அஸாம் மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ்மீண்டும்ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

அறிவிக்கப்பட்ட 121 முடிவுகளில் இந்திரா காங்கிரஸ் 66 ஆசனங்களைக் கைப்பற்றியது. மாநில சட்டசபையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 126 ஆகும். (உ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திரு. இராமையா இராசரத்தினம்

காரைநகர் சிவன்கோவில் வீதியைச் சேர்ந்தவரும், முன்னாள் ஊர்காவற்றுறை அரசாங்க வைத்திய சாலை ஊழியருமான இராமையா இராசரத் தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும், சரஸ்வதி (டென்மார்க்), கனகமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும். செல்வநாதன், பத்மநாதன், சுவந்திரநாதன், செல்வராணி ஆகியோரின் மாமனாரும், துஷிதா, நபன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-6-91 மாலை 4-00 மணியளவில் 23/3, கொண்டலடி வீதி நல்லூரில் நடைபெற்றன என்பதை அறியத் தருகின்றோம்.

23/3, கொண்டலடி வீதி, நல்லூர். தகவல்: கனகமலர்

[17237]

## திரு. சரவணமுத்து கந்தையா

[சந்தசாமி ஆசிரியர்]

திரு. சரவணமுத்து கந்தையா (சந்தசாமி ஆசிரியர்) சிவபதமடைந்துவிட்டார். இவர் யோகம்மா (சண்முகவாத்தியார்)வின் அன்புக் கணவரும் பவானி, நித்தியானந்தன், டாக்டர் ஜெபச்சந்திரன், தனஞ்சயன், பிரதன், பூரணி [பாழ் மருத்துவபீட மாணவி] ஆகியோரின் அன்புத் தந்தையும். மோகனதாஸ், சுகிர்தா ரேவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 699, பருத்தித்துறை வீதியிலுள்ள இல்லத்திலிருந்து ஈமக்கிரியைக்காக 21 - 06 - 91 பிற் பகல் இரண்டு மணிபளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: இ. இராஜகுலேந்திரன்

699, பருத்தித்துறை வீதி, நல்லூர். [17110]

## வைத்திலிங்கம் பரமலிங்கம்
### வீரவேங்கை சின்னச்சுதா

[அராலி]

அராலி தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் — காவேரிப்பிள்ளை தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் வை. பரமலிங்கம் வவுனியாவில் நடைபெற்ற நேரடி மோதலில் 19-6-91 இல் வீரமரணம் அடைந்தார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அராலியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மாவத்தை வீதி, அராலி தெற்கு, அராலி. தகவல்: பொ. சிவராசா

(17246)

## திரு. தம்பு செல்வரெட்ணம்

[முன்னாள் இலங்கை வங்கி ஊழியர்]

திரு தம்பு செல்வரெட்ணம் [முன்னாள் இலங்கை வங்கி ஊழியர்] 20 - 6 - 91 அன்று காலமானார்.

இவர் திருமணியின் அன்புக் கணவரும், புனித மலர், அசோகமலர், இராசமலர் [ஜேர்மன்], விக்கினேஸ்வரி [ஜேர்மன்], விக்கினேஸ்வரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தவமணி திருநாவுக்கரசு [கொக்குவில்] வின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [21 - 6 - 91] பிற் பகல் 3 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி திருமணி செல்வரெட்ணம்

83/1A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [17111]

# 23 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

செல்வன்

## நவரத்தினம் மதியழகன்

(யாழ்ற்றன் கல்லூரி, க. பொ. த (சா. த) மாணவன்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 - 06 - 1974 | 30 - 05 - 1991 |

எங்கள் குடும்பத்தின் மூத்த புதல்வனின் அந்தியேட்டிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை (21 - 06 - 91) அன்னாரது மாமனாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு பணிவன்பாக அழைக்கின்றோம்.

மரணச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும், நோய் வாய்ப்பட்டிருந்த வேளையில் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சையளித்த வைத்தியருக்கும், சக ஊழியர்களுக்கும் அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

அ. நவரத்தினம் குடும்பத்தினர்

144/3, பிறவுண் வீதி, மணற்பிட்டி, காரைநகர். யாழ்ப்பாணம்.

(சி-0166)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 282 இல் உள்ள அச்சகத்தில் 21-06-1991 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org